# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+'தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024.

17 FEB 2025

தொலைபேசி : 0431-2407016/2407060
தொலை நகலி : 0431-2407444
முனைவர் பா. ஜெயபிரகாஷ், M.L.I.Sc., M.Phil., Ph.D., மின்னஞ்சல் : coe@bdu.ac.in
தேர்வு நெறியாளர் (பொ) வலைதளம் : www.bdu.ac.in

---

ந.க.எண்: இ.நி./மு.நி./ஏப்ரல் 2025 சிறப்புத்தேர்வு/02 நாள்: 05.02.2025.

பெறுநர்

முதல்வர்கள்,
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுபெற்ற தன்னாட்சி கல்லூரிகள்,
(Autonomous Colleges) ,

அய்யா/அம்மா,

பொருள்: பல்கலைக்கழக இணைவு பெற்ற தன்னாட்சி கல்லூரிகளில் (Autonomous Colleges) இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளில் பயின்று இன்று வரை படிப்பை நிறைவு செய்யாமல் நிலுவைத்தாள்களை வைத்திருக்கும் மாணாக்கர்களுக்கு ஏப்ரல் 2025-ல் மட்டும் சிறப்புத் தேர்வுகள் நடத்த அனுமதி அளிப்பது - தொடர்பாக.

பார்வை: 1. பதிவாளர் அலுவலக சிசிசிடி பிரிவு அலுவலக குறிப்பு ஆணை எண்: 2739/C4/BOS/2024, நாள்: 29.11.2024.
2.துணைவேந்தரது அனுமதி ஆணை நாள்: 28.01.2025.

-----

பார்வை 1-ல் கண்டுள்ள பதிவாளர் அவர்களின் அலுவலகக் குறிப்பாணைக்கிணங்கவும், பார்வை 2-ல் கண்டுள்ள துணைவேந்தரது அனுமதி ஆணைக்கிணங்கவும், பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்திருந்த N+2 காலவரையரைக்குள் பல்கலைக்கழக இணைவு பெற்ற தன்னாட்சி கல்லூரிகளில் (Autonomous Colleges) இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளை நிறைவு செய்ய இயலாமல் "Span Period" –ன் கீழ் தற்பொழுது வரை எழுத்துத் தேர்வு (Theory Paper), செய்முறைத் தேர்வு (Practical Paper) மற்றும் திட்டக் கட்டுரை (Project) என நிலுவைத்தாள்கள் வைத்திருக்கும் மாணாக்கர்கள் சிறப்பினமாக **ஏப்ரல் 2025** பருவத்தில் மட்டும் அவர்களுடைய நிலுவைத்தாள்கள் தேர்வுகளை எழுதிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

தன்னாட்சி கல்லூரிகளாக (Autonomous Colleges) இருக்கும் தங்கள் கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத கல்லூரிகளாக (Non-Autonomous Colleges) இருந்த பொழுது பல்கலைக்கழக தேர்வுகளை எழுதியிருந்து அவர்களில் எவரேனும் இச்சிறப்புத்தேர்வுக்கு விண்ணப்பிக்க வரும்பொழுது, இச்சிறப்புத் தேர்வு எழுதுவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்புத்தேர்வு விண்ணப்பப்படிவம் (Special Exam. Application) மற்றும் நுழைவுச்சீட்டினை (Admission Card) பூர்த்தி செய்து அம்மாணாக்கர்கள் கைவசம் வைத்திருக்கும் அனைத்து பருவ மதிப்பெண் பட்டியல்களின் நகல்களையும் (Xerox) இணைத்து தங்களது பரிந்துரைக் கடிதத்துடன் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு காலதாமதமின்றி அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், தங்கள் கல்லூரியின் மாணாக்கர்கள் இவ்விவரங்களை தெரிந்துகொள்ளும் வண்ணம் தகவல் பலகையில் தெரிவிக்கவும், சுற்றறிக்கையாக அனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், எதிர்வரும் ஏப்ரல் 2025 பல்கலைக்கழகத்தால் வழக்கமாக நடத்தப்படும் பருவத் தேர்வுகளுடன் இணைத்தே இச்சிறப்புத்தேர்வுகள் நடைபெறும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்புத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுபவர்கள்:
**(Autonomous & Non Autonomous இரண்டிற்கும் பொருந்தும்)**

| | | |
|---|---|---|
| 1. | இளநிலை பட்டப்படிப்பு | 2019-2020 கல்வியாண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் சேர்க்கை பெற்று நிலுவைத்தாள்களை வைத்திருக்கும் மாணாக்கர்கள் அனைவரும் சிறப்புத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவராவார்கள். |
| 2. | முதுநிலை பட்டப்படிப்பு | 2020-2021 கல்வியாண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் சேர்க்கை பெற்று நிலுவைத்தாள்களை வைத்திருக்கும் மாணாக்கர்கள் அனைவரும் சிறப்புத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவராவார்கள். |

தன்னாட்சி அல்லாத கல்லூரியாக இருந்த பொழுது உள்ள மாணாக்கர்களுக்கான நிலுவைத்தாள்களின் சிறப்புத் தேர்வுக்கான கட்டண விவரம்: **(Non-Autonomous Period Candidate)**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வு விண்ணப்பப் பரிசீலனைக்கட்டணம்<br>**(Application Processing Fee)** | ரூ. **50/-** |
| 2. | தேர்வுத்தாள் ஒன்றிற்கு<br>**Theory / Practical / Project - Per Paper** | ரூ. **1,000/-** |
| 3. | பருவ மதிப்பெண் பட்டியல்<br>**(Semester Marks Statement)** | ரூ. 100/- |
| 4. | கூட்டு மதிப்பெண் பட்டியல்<br>**(Consolidated Mark Statement)** | ரூ. 200/- |
| 5. | தற்காலிகச் சான்றிதழ்<br>**(Provisional Certificate)** | ரூ. 200/- |

**விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி : 28.02.2025 வெள்ளிக்கிழமை**

## EQUIVALENT PAPER:

மாணாக்கர்கள் தேர்வு எழுத வேண்டிய பழைய பாடக்குறியீடுகளுக்கு நிகராக தற்பொழுது எழுத வேண்டிய பாடக்குறியீடுகளை **https://www.bdu.ac.in>academics>equivalent-papers** என்ற இணைய முகவரியில் சென்று தெரிந்துகொண்டு தேர்வு விண்ணப்பங்களை பூர்த்திசெய்ய மாணாக்கர்களுக்கு உதவுமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5/2/25

தேர்வு நெறியாளர் (பொ)

நகல்:
1. கணினி நிரலர், இ.நி. பட்டம், கணினிப்பிரிவு, தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
2. கணினி நிரலர், மு.நி. பட்டம், கணினிப்பிரிவு, தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
3. உதவிப்பதிவாளர், ம.பி.-I/ தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
4. உதவிப்பதிவாளர், ம.பி.-II/ தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
5. உதவிப்பதிவாளர், இ.நி., தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
6. துணைப்பதிவாளர், மு.நி., தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
7. உதவிப்பதிவாளர், கணக்குப்பிரிவு, தே.நெ.அ., பா.ப.க., திருச்சி - 24.
8. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர், பா.பா.க.திருச்சி-24
9. பதிவாளரின் நேர்முக உதவியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி - 24.
10. நிதி அலுவலர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி - 24.
11. மக்கள் தொடர்பு அலுவலர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி - 24.